# Press Report

Based on the credible information that A-1 Tr.S.P.Velumani, Formerly Minister for Municipal Administration, Rural Development, Corporation and Panchayat Unions, Poverty Alleviation implementation of Special Programme now, Member of 119 Thondamuthur Assembly Constituency, Coimbatore District, had accumulated assets disproportionate to his known source of income to the tune of Rs.58,23,97,052/- during the period of his office between 27.04.2016 and 15.03.2021 with the aid of 12 other accused by hatching Criminal conspiracy and Abetment, a case was registered in Coimbatore V&AC Cr.No.05/2022/AC/CB, u/s 120 B IPC, 13 (2) r/w 13 (1) (e) of the Prevention of Corruption Act, 1988 and u/s 13(2) r/w 13(1) (b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 against A-1 Tr.S.P.Velumani and u/s 120 B IPC, 13(2) r/w 13(1) (e) of the Prevention of Corruption Act, 1988 r/w 109 IPC and u/s 12 r/w 13(2) r/w 13(1) (b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 against A-2 Tr.P.Anbarasan, A-3 Tmt.S.A.Hemalatha, A-4 Tr. R.Chandrasekar, A-5 Tr.K.Chandraprakash, A-6 Tmt.R.Krishnaveni, A -7 Tmt.K.Sundari, A-8 Tr.H.Karthick, A-9 Tr.J.Vishnuvardhan,A-10 Tr.S.Saravanakumar, A-11 Sri Maha Ganapathi Jewellers Pvt . Ltd., A-12 Constromall Goods Pvt Ltd., A-13 Aalam Gold and Diamonds Pvt Ltd and the investigation of the case is in progress. Subsequent to the registration of the case, today on 15.03.2022, searches are being conducted by Vigilance and Anti-Corruption Department in 59 places (Coimbatore-42, Tiruppur-2, Salem-4, Namakkal-1, Krishnagiri-1, Tiruppathur-1, Chennai-7, Anaikatti-1 Kerala State), where the material objects and documents pertaining to the case could be found. During the course of search Gold ornaments weighing about 11.153 Kilograms, about 118.506 Kilograms of Silver and other incriminating documents were found and unaccounted cash of Rs.84,00,000/-, material objects viz., Mobile Phones, Locker keys of several banks, Laptop, computer hard discs etc., and documents pertaining to the case were seized. Further investment in different types of Crypto currencies to the tune of 34 Lakhs were detected. This case is under investigation.

# செய்தி குறிப்பு

திரு.S.P.வேலுமணி, சட்டமன்ற உறுப்பினர், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி என்பவர் தான் முன்பு தமிழக அரசின் உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராக இருந்த போது 26.04.2016 முதல் 15.03.2021 வரையிலான காலத்தில் 12 நபர்களின் துணையுடன், கூட்டு சதி புரிந்து வருமானத்திற்கு அதிகமாக ரூ 58,23,97,052 அளவுக்கு சொத்து சேர்த்ததாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 5/2022/AC/CB, u/s 120 B IPC, 13 (2) r/w 13 (1) (e) of the Prevention of Corruption Act, 1988 and u/s 13(2) r/w 13(1) (b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன்படி வேலுமணி மீதும் மற்றும் u/s 120 B IPC, 13(2) r/w 13(1) (e) of the Prevention of Corruption Act, 1988 r/w 109 IPC and u/s 12 r/w 13(2) r/w 13(1) (b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன் படி திரு.அன்பரசன், திருமதி.ஹேமலதா, திரு.சந்திரசேகர், திரு.சந்திரபிரகாஷ், திருமதி.கிருஷ்ணவேணி, திருமதி.சுந்தரி, திரு.H.கார்த்திக், திரு.விஷ்ணுவரதன், திரு.சரவணகுமார், ஸ்ரீ மகா கணபதி ஜீவல்லர்ஸ், கான்ஸ்ட்ராமால் குட்ஸ் பிரைவட் லிமிடெட் மற்றும் ஆலம் கோல்டு மற்றும் டயமண்ட்ஸ் பிரைவட் லிமிடெட் மீதும் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக இவ்வழக்கு தொடர்பான ஆவணங்கள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் 59 இடங்களில் (கோயம்புத்தூர்-42, திருப்பூர் -2, சேலம்-4, நாமக்கல் - 1, கிருஷ்ணகிரி -1, திருப்பத்தூர்-1, சென்னை - 7 மற்றும் கேரள மாநிலம் ஆனைகட்டி-1) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் இன்று (15.3.2022) சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி சோதனையில் தங்க நகைகள் 11.153 கிலோகிராம், வெள்ளி சுமார் 118.506 கிலோகிராம் மற்றும் ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டும், கணக்கில் வராத பணம் ரூ.84,00,000/-, சான்று பொருட்களான கைப்பேசிகள், பல வங்கிகளின் பாதுகாப்பு பெட்டக சாவிகள், மடி கணினி, கணினி ஹார்டு டிஸ்க்குகள் மற்றும் வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன. மேலும் சுமார் ரூ.34,00,000/- அளவுக்கு பலதரப்பட்ட கிரிப்டோ கரன்சிகளில் முதலீடு செய்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வழக்கு புலன்விசாரணையில் இருந்து வருகிறது.